**ஊவா மாகாண சபை – 2014**

ஊவா மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, ஊவா மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 மாகாண சபை நிதியம்**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் கணக்கு 2015 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

**2.2.2 ஏனைய கணக்குகள்**

2015 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | 2014 ஆம் ஆண்டிற்குரிய | | | |
|---|---|---|---|---|---|
| | | **கணக்குகளின் மொத்த எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை** | **முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப் படாத கணக்குகளின் எண்ணிக்கை** |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 27 | 25 | 02 | - |
| (ii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 28 | 26 | 02 | - |
| (iii) | வர்த்தக முற்பணக் கணக்குகள் | 09 | 07 | 02 | - |
| (vi) | நிதியக் கணக்குகள் | 10 | 05 | 05 | 27 |
| (v) | நியதிச்சட்டக் கணக்குகள் | 02 | - | 02 | 09 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஊவா மாகாண சமூக சேவைகள் நிதியம் என்ற பெயரில் பதுளை மக்கள் வங்கி முதியங்கன கிளையில் பேணிச்சென்ற நடைமுறை கணக்கு மூடப்பட்டு அதிலிருந்த ரூபா 53,748 தொகை 2012 மார்ச் 14 ஆந் திகதி ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதி முதல் இக்கணக்கில் மீதியொன்று காணப்படாத போதிலும், மீளாய்வாண்டில் ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் கீழ் ரூபா 46,252 மீதியொன்றுடன் சமூக சேவைகள் நிதியம் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட சொத்துக்கள் மீதி ரூபா 46,252 தொகையால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2014 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான ஊவா மாகாண சபையின் திரட்டிய வருமானக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் வருமானங்களின் மொத்த தேறிய நிலுவையாக ரூபா 75,544,161 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 93,243,837 ஆக காண்பிக்கப்பட்டமையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான மீதிகளுக்கிடையே ரூபா 17,699,676 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(இ) மாகாண சபைக்காக குத்தகை அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான குத்தகை தவணைக் கொடுப்பனவிற்காக ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளரின் பெயரில் பதுளை இலங்கை வங்கிக் கிளையில் திறக்கப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கிற்கு வங்கியால் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 49,623 ஆன வட்டித்தொகை மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊவா மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டு மாகாண சபை நிதியத்திற்கு அனுப்பாமல் சேகரிப்புக் கணக்கில் தடுத்துவைக்கப்பட்டிருந்த முத்திரை வருமானம் ரூபா 81,700 ஆக இருந்ததுடன், அவ்வருமானம் நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய வருமானமொன்றாக வெளிப்படுத்தப்படாமையால் முத்திரை கட்டண வருமானம் ரூபா 81,700 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 47,000 ஆன மீதிகள் உட்பட ஊவா மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்களத்தினால் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 3,800,665 தொகையான விற்பனை புரள்வு வரி வருமானம் மாகாண சபையின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,326,361 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் புரள்வு வரி வருமானம் ரூபா 474,304 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 93,300 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி மாகாண சபை நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட 06 முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 38,098,072 தொகையும் 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்குரிய ஊவா மாகாண இயந்திரப் பணிப்பாளர் அலுவலகத்தில் காணப்பட்ட ரூபா 3,962,376 தொகையான தீர்வு செய்யப்படாத மீதிகளும் மீளாய்வாண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 1990 ஆம் ஆண்டின் போது ஊவா மாகாண சபையின் நிதிப் பிரிவில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக ஊவா மாகாண மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளரினால் மாகாண சபையின் பிரதம செயலகத்தின் கணக்காளருக்கு அனுப்பப்பட்டிருந்த 2012 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் அந்நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு அறிக்கைகள் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் அழிக்கப்பட்டுள்ளமையால் இது தொடர்பான தகவல்களைப் தேடிக்கொள்வது சிக்கலாக உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாகாண சபையின் நிதிப்

பிரிவினால் வழக்கொன்று காணப்படுவதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தமையாலும் நிதிக்கூற்றுக்களில் இம் மோசடி தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தமையாலும் இவ்வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பாக எதுவித தெளிவினையும் கொண்டிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(ஏ) விதை உருளைக் கிழங்கு முற்பண கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 41,011,755 தொகையான மீதி 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் சொத்தாக பிரதிபலிக்கப்பட்டிருந்தது. இம்மீதியை குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து மாதாந்தம் அறவிட வேண்டிய போதிலும், அறவீடுகள் சதவீதம் மீளாய்வாண்டிலும் கடந்த 05 ஆண்டு காலப்பகுதியிலும் 05 சதவீதமாக காணப்பட்டமையால் அச்செயற்பாடு உரிய வகையில் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) விவசாயத் திணைக்களத்தில் இடம்பெற்றிருந்த நிதி மோசடிக்கு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தீர்வு செய்யப்படாத மீதி ரூபா 440,990 ஆக இருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கான ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 13,869,334,026 ஆகவும் மொத்த மூலதனச் செலவினம் ரூபா 4,447,953,952 ஆக இருந்தன. ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 13,705,074,171 ஆகவும் மொத்த மூலதனச் செலவினம் ரூபா 4,453,696,237 ஆகவும் இருந்தமையால் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் என்பவற்றிற்கிடையே முறையே ரூபா 164,259,855 மற்றும் ரூபா 5,742,285 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள், சர்வதேச பொதுத்துறைக்காக பயன்படுத்தப்படுகின்ற காசு அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளதாக ''கணக்கீட்டுக் கொள்கைகளில்'' வெளிப்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானம் மற்றும் செலவினங்கள் நிச்சயிக்கப்பட்ட அடிப்படையொன்று இன்றி கணக்கீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன் மற்றும் முற்பணக் கணக்குகளின் மீதிகளுக்கும், மாகாண சபையின் சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 06 அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன் மற்றும் முற்பணக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகளுக்குமிடையே ரூபா 94,143,750 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகளுக்கும், மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 09 அலுவலகங்களின் கட்டுநிதிக் கணக்குகளில் காணப்படும் மீதிகளுக்குமிடையே ரூபா 4,200,483 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பொது வைப்பு மீதிகளுக்கும் மற்றும் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 03 அலுவலகங்களின் பொது வைப்புக் கணக்குகளில் காணப்படும் மீதிகளுக்குமிடையே ரூபா 6,147,090 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.6 கட்டுநிதிக் கணக்கு**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 பிரதேச செயலகங்கள் உட்பட மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 27 அலுவலகங்களுக்குரிய தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகள் ரூபா 36,160,493 கூட்டுத்தொகையாக காணப்பட்டன.

**2.2.7 பொது வைப்புக் கணக்கு**

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கடந்திருந்த மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 29 அலுவலகங்களின் ரூபா 62,357,559 வைப்பு மீதிகளை நிதிப் பிரமாணம் 571 ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மடுள்ள பிரதேச செயலகத்தில் 2011 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2012 செப்தெம்பர் மாதம் வரை வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 97,185 பெறுமதியான 04 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(2) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.8 மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

(அ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 3.1, 3.2 ஆம் பந்திகள் மற்றும் 2004 சனவரி 08 ஆந் திகதிய 2004/01 ஆம் இலக்க ஊவா மாகாண பிரதம செயலாளரின் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் மாகாண சபையிலிருந்து மத்திய அரசின் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஏனைய மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 36 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,131,024 தொகையான கடன் மீதிகளை ஒரே தடவையில் அறவிடுவதற்கு அல்லது கடன் தவணை மற்றும் வட்டி என்பவற்றை மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக மத்திய அரசின் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஏனைய மாகாண சபைகளிலிருந்து ஊவா மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்று வந்திருந்த 15 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 344,022 தொகையான கடன் மீதிகளை ஒரே தடவையில் அறவிடுவதற்கு அல்லது கடன் தவணை மற்றும் வட்டி என்பவற்றை மாதாந்தம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவி வறிதாக்கப்பட்ட, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற 218 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,799,903 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2, 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு சட்டமா அதிபரிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மரணித்த மாகாண சபையின் மூன்று உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்படும் ரூபா 329,531 ஆன கடன் மீதியினை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.9 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

**கணக்காய்விற்குச் தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

(அ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 2,994,038 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) வாய்ப்பளித்தல் முகாமைத்துவத்தின் கீழ் பிரதம செயலாளர் அலுவலகத்தினை அமைக்கும் போது அலுவலகத்திற்கு புதிய உபகரணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட அலுவலக உபகரணங்கள் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்படாதிருந்தமையால் அகற்றப்பட்ட அலுவலக உபகரணங்களின் அளவு தொடர்பாக கணக்காய்வில் பரீட்சிக்க முடியாதிருந்தது.

**2.2.10 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) தாபன விதிக்கோவை | | |
| (I) VII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவு | 81,496 | பதுளை நன்னடத்தை அலுவலகத்தின் நன்னடத்தை உத்தியோகத்தர் II பதவியில் சேவை புரிந்த உத்தியோகத்தரொருவர் பதுளை மற்றும் மஹியங்கன நன்னடத்தை அலுவலகத்தில் நன்னடத்தை உத்தியோகத்தர் I ஆம் பதவியில் பதில் கடமை புரிந்திருந்ததுடன், இரண்டு பதவிகளிலும் வேலை செய்தமைக்காக 2014 சனவரி முதல் ஆகஸ்ட் வரை பதில் கடமை படிகளை பெற்றுக்கொண்டிருந்தார். |
| (II) VII ஆம் அத்தியாயத்தின் 12.2.1, 12:2.2 ஆம் பிரிவுகள் மற்றும் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஒழுங்கு விதிகள் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 113 ஆம் பிரிவு | 105,373 | ஏதேனும் பதவியொன்றில் பதில் கடமை புரிவதற்காக அப்பதவிக்கு சமமான அல்லது அப்பதவிக்கு அண்மித்த கீழான பதவியொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தரொருவரை நியமிக்க முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக 06/2006 இன் பொது நிர்வாகச் சுற்றறிக்கை SL -1-2006 ஆம் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய மாகாண காணி ஆணையாளர் பதவிக்காக 06/2006 இன் SL-3-2006 ஆம் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய கூடிய பதவியொன்றில் சேவை புரியும் அமைச்சொன்றின் செயலாளர் 2013 யூலை 09 ஆந் திகதி முதல் அமுலாகும் வரையில் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2014 சனவரி முதல் ஒக்தோபர் வரை பதில் கடமைப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (III) | VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | 70,605 | பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது ஏற்பாடுகளுக்கு முரணாக விடுமுறை தினப் படிகளை பெற்றுக்கொண்டிருந்தனர். |
| (IV) | XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | 6,187,186 | பதுளை பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர் களிடமிருந்து 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆண்டு வரை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (V) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | - | பட்டியலிடப்பட்ட வீடுகளுக்கு உரித்தான உத்தியோகத்தர்களிடமிருந்து மாதாந்த சம்பளத்தில் 10 சதவீதம் வீட்டு வாடகையாக அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து பட்டியலிடப்பட்ட வீட்டுக்கு உரித்தான மாகாண சபையின் செயலாளர்களிடமிருந்து வீட்டு வாகையாக ரூபா 500 மாதாந்த பெயரளவிலான வாடகை அறவிடப்பட்டிருந்தது. |
| (VI) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 மற்றும் 5.4.1 ஆம் பிரிவு | | பிபில வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய 77 அரசாங்க இல்லங்கள் தொடர்பாக தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (VII) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | | (அ) அரசாங்க இல்லமொன்றில் குடியிருக்கக்கூடிய காலம் 05 வருடங்களாக இருந்த போதிலும், மொனராகலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய அரசாங்க இல்லத்தில் மொனராகலை பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவை புரியும் உத்தியோகத்தரொருவர் கணக்காய்வு திகதியான 2014 நவம்பர் 14 ஆந் திகதி வரையில் 13 வருடங்களும் 06 மாதங்களும் வசித்து வந்திருந்தார். இதன் காரணமாக வேறு உத்தி யோகத்தர்களுக்கோ பெண் உத்தியோ கத்தர்களுக்கோ வசிப்பதற்கிருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.<br><br>(ஆ) ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் வாடகை காலத்தை மிகைத்து அரசாங்க இல்லங்களில் 07 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையான காலப்பகுதியில் வசித்து வந்தமை அவதானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஊவா மாகாண சபை நிதி விதிகள் | | |
| (I) | நிதி விதி 137.3 | 24,288 | மஹியங்கன ஆதார வைத்தியசாலைக்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கு 2014 சனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையை மிகைத்து கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (II) | நிதி விதி 216.1 | 13,898,258 | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாகாண சபையின் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களிலிருந்து பிரதி பிரதம செயலாளருக்கு (ஆளணி மற்றும் பயிற்சி) அனுப்பி வைக்கப்பட்டிருந்த பணத்தை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்து 2015 ஆம் ஆண்டின் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக செலவிடப்பட்டி ருந்தது. |
| (III) | நிதி விதி 237(ஆ) | 1,132,075 | 06 பிரதேச செயலகங்களின் களஞ்சிய வழங்கலுக்கான கொடுப்பனவை உறுதிப்படுத்துகையில் பொருள் கிடைக்கப் பெற்றுள்ளமைக்கான இருப்புச் சான்றிதழ் இன்றி 53 உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. |
| (IV) | நிதி விதி 751.1 | - | ஊவா பரணகம, பண்டாரவெல மற்றும் ஹாலிஎல பிரதேச செயலகங்களுக்கு ஊவா மாகாண கல்வி அமைச்சிடமிருந்து கிடைத்த 16 வகைகளுக்குரிய பொருட்களும் 4677 பொருள் அலகுகளும் இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (V) | நிதி விதி 846.1 | 117,347 | ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் தனியார் கம்பனியிடமிருந்து 25 புதிய தொலைபேசி இணைப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டு அதற்கான மாதாந்த பட்டியல்களும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஊவா மாகாண பிரதம செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | | |
| (I) | 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | 54,029 | மாதாந்த போக்குவரத்து படிகளைப் பெற்றுக் கொள்கின்ற ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளரின் இணைப்புச் செயலாளர் சுற்றறிக்கையின் II ஆம் பந்திக்கு முரணாக குழாம் வாகனங்களைப் பயன்படுத்தி 2992 லீற்றர் எரிபொருளைப் பயன்படுத்தியிருந்தார். |

| | | | |
|---|---|---|---|
| (II) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 04 அலுவலகங் களுக்குரிய உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (III) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | 1,296,194 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினச் சம்பளத்திற்காக கடமை நேரங்கள் கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதி பிரதம செயலாளரின் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலக பதவியணியினர் மேலதிக நேர மற்றும் விடுமுறை தினப் படிகளை பெற்றுக்கொண்டிருந்தனர். |
| (ஈ) | திறைசேரி சுற்றறிக்கைகள் | | |
| (I) | கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 1:2:1 ஈ பிரிவு | - | ஊவா மாகாண சபைக் கட்டிடத் தொகுதி உட்பட மாகாண சபைக்குரிய அலுவலகங்களுக்கு 2014 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு சேவைகள் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை பெற்றுக்கொள்கையில் தகைமையுடைய ஆர்வமுள்ள தரப்பினருக்கு கொள்வனவில் பங்குபற்றுவதற்காக நியாயமான சமமான மற்றும் கூடிய சந்தர்ப்பங்களை வழங்குதல் என்ற நோக்கங்களிலிருந்து விலகி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (II) | கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.8 ஆம் பிரிவு | - | மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களுக்கு கணித உபகரணங்கள் கொள்வனவு தொடர்பில் ஊவா மாகாண கல்வி அமைச்சினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (III) | கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.14 ஆம் பிரிவு | | சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் ஆகக்குறைந்தது மூன்று வழங்குனர் களிடமிருந்து பெற்றுக்கொண்ட விலை விபரங்களின் அடிப்படையில் வழங்குனர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், மாகாண விவசாயத் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது 13 சந்தர்ப்பங்களில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (IV) | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9 ஆம் பிரிவு | 208,310 | 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் பெப்ரவரி 26 ஆந் திகதி வரை ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு சுத்திகரிப்பு சேவையினை வழங்குவதற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று இல்லாமல் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. |

(உ) ஏனைய சுற்றறிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| (I) | 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 04/10 ஆம் இலக்க காணி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | பதுளை மற்றும் ஹப்புத்தளை பிரதேச செயலகங்களில் வாடகை அலகுகள் தாபிக்கப்பட்டு வாடகை சேகரிப்பவர்களின் பட்டியல், கட்டுப்பாட்டுக் கணக்கு, நிலுவைக் கட்டுப்பாட்டுக் கணக்கு போன்ற ஆவணங்கள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (II) | ஊவா மாகாண பிரதம செயலாளர் மற்றும் அமைச்சரவை செயலாளரின் 2006 செப்தம்பர் 20 ஆந் திகதிய அ.தி. 73/2006 ஆம் கடிதம் | 580,000 | மாகாண சபை அமைச்ரொருவரின் உத்தியோகபூர்வ பிரயாணங்களுக்காக மாதமொன்றுக்கு ரூபா 10,000 இற்கு உட்பட்ட இணைந்த படியொன்று செலுத்தப்பட முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக ஊவா மாகாண விவசாய, கமநல அபிவருத்தி, கால்நடை உற்பத்தி, நன்னீர் மீன்பிடி, சுற்றாடல் மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சின் அமைச்சருக்காக 2009 செப்தம்பர் முதல் 2014 யூன் வரையான காலப்பகுதியில் மாதமொன்றுக்கு பிரயாணச் செலவினப்படியாக ரூபா 20,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2.2.11 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஊவா மாகாண சபை நிதி விதி 503 இல் உள்ள ஏற்பாட்டிற்கு முரணாக 04 கணக்கு விடயங்களின் வரவு மீதியின் ஆகக்கூடிய எல்லை ரூபா 63,047,324 ஆல் மிகைத்திருந்ததுடன், 07 விடயங்களில் பெறுவனவுகளின் குறைந்த எல்லை ரூபா 76,323,592 ஆல் குறைவடைந்திருந்தது.

## 3. வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எல்ல, பதுளை, ஊவா பரணகம, பசறை, சொர்ணாதொட்ட மற்றும் ஹாலிஎல ஆகிய 06 பிரதேச செயலகங்களில் வருடாந்த அனுமதிப்பத்திரத்தின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிக்கான ரூபா 184,711 ஆன வாடகையும் ரூபா 24,593 ஆன தண்டப் பணமும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹப்புத்தளை பிரதேச செயலகத்தினால் வருடாந்த அனுமதிப்பத்திரத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த 04 வாடகைகளின், 2008 – 2012 காலப்பகுதிக்காக கிராம உத்தியோகத்தர்களால் அறவிடப்பட்டிருந்த ரூபா 13,229 ஆன வாடகைப் பணம் பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதுளை, ஊவா பரணகம, ஹப்புத்தளை, மஹியங்கன மற்றும் பண்டாரவெல பிரதேச செயலகங்களில் நீண்டகால அடிப்படையில் காணிகளை வாடகைக்கு வழங்கியமைக்காக 48 வாடகையாளர்களிடமிருந்து ரூபா 5,961,493 ஆன வருடாந்த குத்தகை, தவணை / தண்டப் பணம் மற்றும் ரூபா 556,259 ஆன வட்டிப்பணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹப்புத்தளை மற்றும் ஹாலிஎல பிரதேச செயலகங்களால் 14 வாடகையாளர்களிடமிருந்து ரூபா 9,937,073 ஆன வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டண தவணை / தண்டப் பணம் என்பன குறைத்து அறவிடப்பட்டிருந்தது.

(உ) 2007 ஆம் ஆண்டிலிருந்து தனியார் கம்பனியொன்றினால் லுனுகல பிரதேச செயலகத்திற்குரிய ஜனதாபுர கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள அலுபோகொல்ல என்ற அரசாங்க காணியில் தொலைத்தொடர்பு கோபுரமொன்று நிர்மாணிக்கப்பட்டு பேணிச்செல்லப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் மாதம் வரை காணிக்குரிய குத்தகை வழங்கப்பட்டிருக்காமையினால் அரச காணியை பயன்படுத்தியமைக்காக எவ்வித வாடகையொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 ஆம் ஆண்டிற்குரிய லுனுகல 02 ஆம் இலக்கம் கள்ளு தவரணையினை விற்பனை செய்வதற்காக லுனுகலை பிரதேச செயலாளரினால் கூறுவிலை கோருகையில் கூடிய விலை சமர்ப்பித்த கேள்விதாரரின் கேள்வி விலை ரூபா 7,030,000 தொகையான கூறுவிலை, மது வரி ஆணையாளரின் மதிப்பீட்டு விலை ரூபா 9,500,000 ஐ விட குறைவாக இருந்தது. மதிப்பீட்டு அடிப்படையில் கள்ளுத் தவரணையினை பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரரரை விசாரித்து அல்லது கேள்வி அறிவித்தலின் பிரகாரம் தவரணையினை மீள விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மது வரி ஆணையாளரின் பெறுமதியில் 10% குறைக்கப்பட்ட ரூபா 8,500,000 தொகைக்கு கூடிய விலை சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு விற்பனை செய்தமையால் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த அனுமதிப்பத்திர வருமானத்தில் ரூபா 1,000,000 தொகை இழக்கப்பட்டிருந்தது.

(எ) ஹல்துமுல்ல பிரதேச செயலகத்தினால் 2008 – 2015 காலத்திற்காக மதுபான அனுமதிப்பத்திரத்தை வழங்குகையில் இரண்டு அனுமதிப்பத்திரதாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம் ரூபா 235,000 குறைத்து அறவிட்டமை மற்றும் 05 சந்தர்ப்பங்களில் தாமதமாக அனுமதிப்பத்திர கட்டண கொடுப்பனவுகளுக்காக அறவிடப்பட வேண்டிய தண்டப் பணமான ரூபா 3,300 தொகை அறவிடப்படாமையால் இழக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் என்பன ரூபா 238,300 ஆக இருந்தது.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கு மாகாண சபை நிதியத்தில் ரூபா 711,759,187 மிகையொன்று காணப்பட்டதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 20,446,949 ஆக இருந்தது.

### 4.2 வருமானங்களும் செலவுகளும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

## வருமானம்

| | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | | | | | | |
| வரி வருமானம் | 2, 102,456,000 | 2,051,316,974 | (51,139,026) | 2,241,565,000 | 1,757,156,247 | (484,408 ,753) |
| வரியல்லாத வருமானம் | 277, 544 ,000 | 545, 164,047 | 267, 620,047 | 247,845 ,000 | 404,555,653 | 156,710,653 |
| அரசாங்க மானியம் | 19,380 ,202,600 | 16,432 ,566,144 | (2,947,636,456) | 15,311 ,208,000 | 14,518,293,631 | (792,914,369) |
| | 21,760, 202,600 | 19,029,047,165 | (2,731,155,435) | 17,800, 618,000 | 16,680,005,531 | (1,120,612,469) |

## செலவினம்

| | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| மீண்டெழும் செலவினம் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆளணி வேதனம் | 11,289,862,552 | 11,053,931,370 | 235,931,182 | 10,335,715,494 | 10,008,174,243 | 327,541,251 |
| ஏனையவை - மீண்டு வருபவை | 3,716,408,098 | 2,815,402,656 | 901,005,442 | 3,028,201,469 | 2,521,023,080 | 507,178,389 |
| உப மொத்தம் | 15,006,270,650 | 13,869,334,026 | 1,136,936,624 | 13,363,916,963 | 12,529,197,323 | 834,719,640 |
| அரசாங்க முதலீடு | 4,995,084,591 | 4,447,953,952 | 547,130,639 | 3,667,406,252 | 4,130,361,259 | 462,955,007 |
| | 20,001,355,241 | 18, 317,287,978 | 1,684,067,263 | 17,031,323,215 | 16, 659,558,582 | 1,297,674,647 |

மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 18, 317,287,978 ஆகும். அதில் 75 சதவீதம் மீண்டுவரும் செலவினமாக இருந்ததுடன், 25 சதவீதம் மூலதனச் செலவினமாக இருந்தது

## 5. நிதிய மற்றும் வர்த்தக முற்பணக் கணக்குகள்

### 5.1 நிதியக் கணக்கு

#### 5.1.1 ஆளுநர் நிதியம்

(அ) ஊவா மாகாண ஆளுநர் நிதியம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 04 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் நிதியத்தின் பணத்தை ஈடுபடுத்தக்கூடிய 06 செயற்பாடுகளில் 82 சதவீதம் 02 செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய அனைத்து செயற்பாடுகளுக்காக 18 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான வைப்புக்களை மீள முதலீடு செய்கையில் நிதியத்திற்கு சாதகமான வருமானமொன்றை உழைக்க கூடிய வகையில் நிதிச் சந்தை வட்டி தொடர்பாக விசாரித்து வினைத்திறனாக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டினை விட 2014 ஆம் ஆண்டின் போது ஆளுநர் நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கூடுதலான நிதி பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிலையான வைப்புக்களின் மீதியான ரூபா 7,847,400 தொகையுடன் ஒப்பிடுகையில் மக்களின் சுபீட்சத்துக்காக பயன்படுத்தப்பட்ட தொகை ரூபா 2,356,518 அல்லது 30 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதனை விட நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வது தொடர்பில் கூடுதலாகக் கவனம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 5.1.2 முதலமைச்சர் நிதியம்

(அ) 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டின் போது முதலமைச்சர் நிதியத்திற்கு கிடைத்த வருமானம் ரூபா 1,810,521 ஆல் அதிகரித்திருந்ததுடன், உதவிகளுக்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 1,384,080 ஆலும் நலனாளிகளின் எண்ணிக்கை 42 ஆலும் குறைவடைந்திருந்தது.

(ஆ) முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரம், செயற்பாடு மற்றும் கடமைகளை மேற்கொள்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பாக தாக்கமளிக்கும் அல்லது அது தொடர்பான அல்லது அதற்கு அண்மித்த எந்தவொரு காரணத்திற்காகவும் அவசியமென சபை கருதும் விதிகளைத் தயாரிப்பதற்கு சபைக்கு அதிகாரம் காணப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதியான 2015 மே 12 ஆந் திகதி வரையிலும் அவ்வாறான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 5.1.3 ஊவா தொழில் முயற்சி அபிவிருத்தி நிதியம்

ஊவா தொழில் முயற்சி அபிவிருத்தி நிதியத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 6,722,202 கூட்டுத்தொகையாக இருந்தது.

### 5.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

#### 5.2.1 தச்சுவேலை பாடசாலை வர்த்தக முற்பணக் கணக்கு

2014 ஆம் ஆண்டின் போது தச்சுவேலை பயிற்சிக்காக தச்சுவேலை பாடசாலை பயிற்சி நிலையங்களுக்கு சேர்க்கப்பட்ட பயிலுனர்களின் எண்ணிக்கை 69 ஆக இருந்த போதிலும், பயிற்சியை

பூரணப்படுத்திய பயிலுனர்களின் எண்ணிக்கை 22 ஆக காணப்பட்டதுடன், வெவ்வேறு காரணங்களினால் 41 பயிலுனர்கள் பாடநெறியை விட்டு சென்றிருந்தனர்.

### 5.2.2 இலகு பொறியியல் முற்பணக் கணக்கு

(அ) அரச மற்றும் தனியார் கட்டளைகளுக்காக பொருட்களை உற்பத்தி செய்தல், இரும்பு பொருட்கள் மற்றும் கதவு யன்னல்களை தயாரிப்பது தொடர்பாக பயிலுனர்களுக்கு பயிற்சியினை வழங்குதல் என்பன பொறியியலாளர் பயிற்சி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதற்கான அடிப்படை நோக்கமாகக் காணப்பட்ட போதிலும், 2010 ஆண்டின் பின்னர் பெரகல இலகு பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்திற்கு பயிற்சிக்காக ஒரு பயிலுனர் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், மெதகம பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்திற்கு 2014 ஆம் ஆண்டிற்காக 18 பயிலுனர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். 2010 – 2014 காலப்பகுதியில் பெரகல மற்றும் மெதகம பொறியியலாளர் பயிற்சி நிறுவனங்களிற்கு பயிலுனர்கள் சேர்த்துக்கொள்ளல் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிலுனர்கள் எண்ணிக்கை | |
|---|---|---|
| | பெரகல | மெதகம |
| 2010 | இல்லை | 10 |
| 2011 | இல்லை | 10 |
| 2012 | இல்லை | 01 |
| 2013 | இல்லை | 08 |
| 2014 | 01 | 18 |

(ஆ) பெரகல மற்றும் மெதகம இலகு பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்திற்குச் சொந்தமாக கட்டிட வசதிகள், இயந்திரங்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சேவை காணப்படுகையில் பயிலுனர்களைச் சேர்த்து பயிற்சிகளை வழங்குவதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மேற்குறித்த நிறுவனங்களுக்கு உற்பத்திக்காக கிடைக்கப்பெற்றிருந்த கட்டளைகளுக்காக வெளியிலிருந்து கைப்பணியாளர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

### 5.2.3 ஒக்கம்பிடிய விதைகள் பண்ணை முற்பணங்கள் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,558,566 தொகையான வளர்ந்து வரும் பயிர்ச்செய்கை மதிப்பீடு செய்யப்பட்டது தொடர்பான அடிப்படை விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பெற வேண்டியிருந்த ரூபா 2,207,911 தொகை 2014 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல ஆண்டுகளாக நிலவி வருகின்ற விற்பனை புரள்வு வரிக் கணக்கின் ரூபா 333,561 மீதி தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் கடன்பட்டோர் மீதி ரூபா 322,198 ஆக இருந்ததுடன், அம்மீதியை சான்றுறுதிப்படுத்துவதற்கு போதியளவு கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2.4 மாவட்ட இயந்திர வேலைத்தள முற்பணங்கள் கணக்கு

மாவட்ட இயந்திர வேலைத்தள முற்பணக் கணக்கில் 2011 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத நிலுவை வருமானங்களின் பெறுமதி ரூபா 4,674,336 ஆக இருந்தது.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றுகை

### 6.1.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கிடைக்கப் பெற்ற நிதிஏற்பாடு மற்றும் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| மூலங்கள் | தேறிய நிதியேற்பாடு | செலவினம் | குறைப் பயன்பாடு | சேமிப்பு சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| கல்வி | 245,840,000 | 245,840,000 | - | - |
| சுகாதாரம் | 245,840,000 | 206,000,000 | 39,840,000 | 10 |
| சுகாதாரத் துறை அபிவிருத்தி செயற்திட்டம் | 180,000 | 180,000 | - | - |
| கல்வித்துறை அபிவிருத்தி செயற்திட்டம் | 285,000,000 | 281,468,037 | 3,531,963 | - |
| யுனிசெப் நிகழ்ச்சித்திட்டம் | 38,775,600 | 37,080,200 | 1,695,400 | - |
| சமூக சேவைகள் | 13,000,000 | 13,000,000 | - | - |
| மாகாண வீதி செயற்திட்டம் | 1,810,000,000 | 1,599,865,908 | 210,134,092 | 10 |
| உட்கட்டமைப்பு வசதிகள் | 906,595,000 | 906,595,000 | - | - |
| பொருளாதார அபிவிருத்தி | 800,000,000 | 352,405,000 | 447,595,000 | 50 |
| நிறுவனம் சார் மூலதனச் செலவினம் | 111,000,000 | 110,160,000 | 840,000 | - |

### 6.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் நடைமுறை வேலைகளுக்காக ரூபா 1492.2 மில்லியன் பெறுமதியான 2646 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், வேலைத் திட்டங்களது முன்னேற்றங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | புதிய வேலைகள் | நடைமுறை வேலைகள் | வேலைத் திட்டங்களது மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| முற்றாக முடிவுற்றவை | 1682 | 745 | 2427 |
| 50% க்கு அதிகமாக முடிவுற்றவை | 78 | 07 | 85 |
| 50% க்கும் குறைவாக முடிவுற்றவை | 31 | 02 | 33 |
| ஆரம்பமாகாதவை | 54 | - | 54 |
| சர்ச்சைக்குரிய/பிரச்சினைகளை பின்னணியாகக் கொண்டவை | 47 | - | 47 |
| மொத்தம் | 1892 | 754 | 2646 |

### 6.1.3 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 01 இல் உள்ளவாறு ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய 95 கோப்சிட்டி, மினிகோப் சிட்டி மற்றும் மெகா கோப் சிட்டிகள் 68 ரூபா 4,572,088 தொகையான நட்டத்தை அடைந்து வங்கரோத்து நிலையில் காணப்பட்ட போதிலும் இலாபம் அடையக் கூடிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் காணிக் கடமைகள் தொடர்பில் 2014 ஆம் ஆண்டில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த இலக்குகளுடன் பெற்றுக்கொண்ட செயன்முன்னேற்றத்தை ஒப்பிடுகையில் அநேகமான விடயங்கள் தொடர்பாக எதிர்பார்த்த இலக்கில் 50% ஏனும் நிறைவேற்றப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. மாகாணத்தின் 26 பிரதேச செயலகங்களிற்காக ஒரு அலுவலகத்திற்கு திணைக்கள உத்தியோகத்தர்கள் மூன்று பேர் வீதம் இணைக்கப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் மாற்றீட்டு பிரயாண செலவினமாக ரூபா 1,302,316 தொகை திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(இ) வெலிமட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு குடும்ப சுகாதார சேவைப் பிரிவுகள் 35 உரித்தாவதுடன் 2014 ஆம் ஆண்டில் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் அவற்றில் 13 பிரிவுகளில் மட்டும் 07 நாட்களில் மேற்பார்வை செய்திருந்தார். அப்பிரிவுகள் பலவற்றில் வீட்டில் பிரசவம், கர்ப்பிணிகளின் குறை மாத வீட்டுப் பிரசவம், பிரசவத்தின் பின் முதிர்ச்சியடையாத குழந்தைப் பேறு என்பன காணப்பட்டதுடன் தாய்மார்களின் சுகாதார நிலைமை மிகவும் பின்னடைந்ததாகக் காணப்பட்டது.

### 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், சிறிய பெருந்தோட்ட முயற்சியாளர் அபிவிருத்தி மன்றம் மற்றும் பிபில பிரதேச செயலகம் என்பவற்றுடன் பிரதேசத்தின் அதிகாரப் பிரதேசத்தின் கனவேகல்ல, புலுபிட்டிய, நில்கல ஆகிய 03 பிரிவுகளில் 520 ஏக்கர் காணி 261 இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், பயிர்ச்செய்கையாளர்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த அடிப்படை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் உடன்படிக்கையின் 4.3 ஆம் நிபந்தனையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை ஒவ்வொரு ஆண்டும் உடன்படிக்கை நீடிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2014 நவம்பர் 27 ஆந் திகதி வரையிலும் 261 உடன்படிக்கைகளின் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தியதலாவ ஆதார வைத்திய வைத்தியசாலையில் சமைக்காத உணவு கொள்வனவின் போது ஊவா மாகாண சபை நிதி விதி 137(2) மற்றும் 156(7) இற்கு முரணாக நடவடிக்கை எடுத்து உடன்படிக்கை பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட உணவு வேலைக்காக வழங்கப்பட வேண்டிய சமைக்காத உணவுப் பொருட்களை வழங்காமல் சந்தையில் குறைவான விலையில் காணப்படும் உணவுகளை வழங்கியதன் மூலம் மேலதிக இலாபமொன்றை உழைப்பதற்கு ஒப்பந்தகாரருக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(இ) தியதலாவ ஆதார வைத்திய வைத்தியசாலை, பதுளை பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், வெலிமட ஆதார வைத்திய வைத்தியசாலை என்பவற்றை சுத்திகரிக்கும் நடவடிக்கைளுக்காக பயன்படுத்தப்படுகின்ற சுத்திகரிப்பு பொருட்களிற்காக ஆண்டொன்றிற்கு ரூபா 1,645,262 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டியிருந்ததுடன், அப்பொருட்கள் உள்ளவாறாக சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமை

தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ஊவா மாகாண நிதி விதி 752, 743 இன் பிரகாரம் பொருட்களைப் பொறுப்பேற்றல் அல்லது விநியோகித்தல் தொடர்பான பதிவேடுகள் நிறுவனத்தினால் பேணப்படாதிருந்ததுடன், நிதி விதி 237(ஆ) இலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பொருட்கள் உண்மையில் உள்ளவாறாக கிடைத்தமை பற்றி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தியதலாவ ஆதார வைத்திய வைத்தியசாலை சுத்திகரிப்பு சேவை உடன்படிக்கையின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு பொருட்களை களஞ்சியப்படுத்தவதற்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் ஏதேனும் இடமொன்று அல்லது அறையொன்று வழங்கப்படுமாயின் அதற்காக நியாயமான வாடகையொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு வாடகை அறவிடாமல் பழைய வெளிநோயாளர் பிரிவின் பகுதியொன்று குறித்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) பண்டாரவெல மாவட்ட வைத்தியசாலைக்குரிய காணியில் 67 சதுர மீற்றர் அளவு (2.66 பேர்ச்) அனுமதியின்றி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதாக நில அளவையாளர் திணைக்களத்தினால் 2013 நவம்பர் 25 ஆந் திகதி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வெலிமட மாவட்ட வைத்தியசாலை அமைந்துள்ள நின்தகல பனத்த காணியில் 1 ஏக்கர் 08 பேர்ச் அளவில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியேறி நிரந்த கட்டிடங்களை நிர்மாணித்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், வைத்தியசாலை காணி 1996 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை எல்லைகளை தீர்வு செய்வதற்காக ஆறு முறை எல்லைகள் சுட்டிக்காட்டப்பட்டு நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் காணியை பாதுகாப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துமீறிய குடியிருப்பாளர்களை அக்காணியிலிருந்து அகற்றி 1979 இன் 07 ஆம் இலக்க காணி உரித்தை மீளப் பெற்றுக் கொள்ளும் சட்டத்தின் பிரகாரம் சுகாதாரத் திணைக்களத்திற்கு உரித்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊழியர்களிடமிருந்து அறவிட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 79,659 தொகையான 33 சேமலாப நிதிய தவணைகள் உரிய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் கணக்காய்வு திகதியான 2014 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) ஊவா மாகாண சபையின் இளைஞர் விவகார, விளையாட்டு, சமூக நலனோம்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்வலு மற்றும் எரிசக்தி, புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சினால் 2010/2011 ஆம் ஆண்டுகளில் ஊவா மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள விளையாட்டுச் சங்கங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த விளையாட்டுப் பொருட்களில் ரூபா 1,164,685 பெறுமதியான பொருட்கள் 2015 மே 11 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

(ஐ) மொனராகலை கல்வி வலயத்திற்குரிய 12 பாடசாலைகளில் 2014 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு ரூபா 1,756,828 தொகையான தர உள்ளீட்டு பணம் செலவு செய்யப்படாமல் விளைவற்று கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன், 2014 நவம்பர் 04 ஆந் திகதி அந்த 12 பாடசாலைகளுக்கும் மீண்டும் தர உள்ளீட்டுப் பணமாக ரூபா 1,204,258 தொகை வழங்கப்பட்டிருந்தத.

(ஒ) வெலிமட மற்றும் மொனறாகலை வலயக் கல்வி அலுவலகங்களினால் 2014 நவம்பர் 12 ஆந் திகதி வரை ரூபா 2,982,908 தொகை குறித்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாது பொது வைப்புக் கணக்கில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

| வைப்புச் செய்த செயற்பாடு | வைப்புச் செய்த திகதி | வைப்புச் செய்த தொகை | |
|---|---|---|---|
| தர உள்ளீட்டு பணம் | 2012.02.27 | 2,692,952 | |
| எயிட்ஸ் நோய் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் | 2012.01.17 | 121,650 | |
| மாணவர் பாதுகாப்பு புலமைப் பரிசில் பணம் | 2011.09.22 | 82,500 | |
| | | ----------- | 2,897,102 |
| மொ/கலுகஹவாடிய க.வி. – மின் வழங்கல் | 2012.12.05 | 43,511 | |
| மொ/கெசெல்கொட்டுவ க.வி – நீர் வழங்கல் | 2012.12.07 | 15,500 | |
| மொ/கொன்கஸ்பிட்டிய க.வி – வலை அடித்தல் | 2012.12.26 | 26,795 | 85,806 |
| | | --------- | ------------- |
| மொத்தம் | | | 2,982,908 |
| | | | ======= |

(ஓ) மொனராகலை வலயக் கல்வி அலுவலகத்தின் நிதி உதவியாளருக்குரிய அரச இல்லம் 2012 ஒக்தோபர் மாதம் முதல் மொ/ரோயல் மத்திய வித்தியாலயத்தின் அதிபருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2014 சனவரி முதல் நவம்பர் வரை மாதாந்த வாடகை ரூபா 10,725 தொகை குறைத்து அறவிடப்பட்டிருந்தது.

(ஔ) பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்திற்குச் சொந்தமான 19 ஆம் இலக்க அரச இல்லத்தில் குடியிருந்த உத்தியோகத்தரிடமிருந்து 2006 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டு அறவிட்டு வரப்படுகின்ற ரூபா 1,750 ஆன சிக்கன வாடகை 2015 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் மீண்டும் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், 2006 ஆம் ஆண்டின் பின்னர் ரூபா 842,189 தொகை செலவு செய்து பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

(ஃ) தாபன விதிக்கோவையின் XXII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் சிற்றுண்டிச்சாலையினை நலன்புரிச் சிற்றுண்டிச்சாலையாக நடாத்திச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தது. ஊழியர் நலன்புரி தொடரில் போதிய கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன், நலன்புரி சிற்றுண்டிச்சாலையாக நடாத்திச் செல்லப்படாதிருந்த போதிலும் பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்திலிருந்து 11 மேசைகளும் 26 கதிரைகளும் சிற்றுண்டிச்சாலைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன.

(க) ரூ 654,090 தொகை செலவு செய்து ஊவா மாகாண சபை வளவில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கமரா முறைமையின் உத்தரவாத காலம் ஒரு ஆண்டென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்தினால் வழங்குனர் நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்புக் கமரா முறைமையைப் பொருத்துவதற்குரிய மதிப்பீடொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன், பாதுகாப்புக் கமராவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தரவுகள் 18 நாட்களின் பின்னர் சுயமாக அழிவுறுவதனால் விதந்துரைகளைத் தயாரிக்கும் போது தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் இயலளவு தொடர்பாக கருத்திற் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது பாதுகாப்புக் கமராவைப் பொருத்துகையில் கொள்வனவுச் சபை தீர்மானித்த விலைக்கு மேலதிகமாக ரூபா 43,890 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ப/பசறை கமேவெல ஜயந்தி வித்தியாலயத்திலிருந்து 2013 மே 02 ஆந் திகதி பசறை தேசிய பாடசாலையின் பிரதி அதிபராக இடமாற்றத்தைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் மாகாண

நிதி விதி 755.1 இன் பிரகாரம் அனைத்து பொருளிருப்பு உருப்படிகளையும் 11 மாதங்களுக்கு பின்னர் பதிலாளுக்கு கையளித்திருந்தார். புதிய அதிபருக்கு பொருட்களை கையளிக்கையில் 08 பொருள் உருப்படி தொடர்பில் பற்றாக்குறையும் 03 பொருள் உருப்படிகள் தொடர்பாக மிகையும் காணப்பட்டன. உறுதிச்சிட்டுக்கள், பற்றுச்சீட்டுக்கள், பொது 219 உடன் கூடிய புத்தகங்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்குரிய 04 ஆம் இலக்க காசோலைப் புத்தகம் என்பன மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

(அ) ஊவா மாகாண சபையின் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சினால் படல்கும்புர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் விளையாட்டு நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி ரூபா 25,000 தொகை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அறிவுறுத்தல்களின் பிரகாரம் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதிக்கு முன்னர் அமைச்சிற்கு பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 20 கணக்காய்வு திகதி வரையிலும் கொள்வனவு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) வெள்ளவாய வலயக் கல்வி அலுவலகத்தினால் இரண்டாம் தர பாடசாலைகளுக்காக கற்பித்தல் மேமம்படுத்தல் நிதியத்தின் கீழ் ஒரு பாடசாலைக்கு ரூபா 30,000 வீதம் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. மாகாண சபை நிதி விதி 371.2.2 இன் பிரகாரம் குறித்த செயற்பாடு நிறைவுபெற்றவுடன் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 09 பாடசாலைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 270,000 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெல்லவாய வலயக் கல்வி அலுவலகத்திற்கு வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கிடைத்திருந்த ரூபா 12,670,756 தொகையை செலவு செய்யாமல் 2015 ஏப்ரல் 02 ஆந் திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) விசிரி காணி கச்சேரி மூலம் பதுளை பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட குத்தகையாளர்களின் 07 குத்தகை ஆதனங்களுக்கு காணி ஆணையாளர் நாயகம் 2011 யூன் 20 மற்றும் 2011 நவம்பர் மாதங்களில் குத்தகை அங்கீகரிக்கப்பட்ட கடிதங்களை வழங்கி குத்தகை உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவித்திருந்தார். 2015 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட கடிதங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்கள் எதுவும் நிறைவேற்றப்படாது குத்தகை கோவை செயற்பாடற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) ஊவா பரணகம பிரதேச செயலக களஞ்சியத்திற்கு 2013 திசெம்பர் 30 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற ஒலிபெருக்கி இயந்திரமொன்று 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகி வரையிலும், ஹல்துமுள்ள பிரதேச செயலகத்தின் களஞ்சியத்திற்கு 2013 திசெம்பர் மாதம் கிடைத்திருந்த 04 வகைகளுக்குரிய 277 பொருட்கள் / உபகரணங்கள் அலகுகள் 2015 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் குறித்த நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 ஆம் ஆண்டின் போது இரண்டு நலனாளிகளின் மருத்துவ சிகிச்சைக்காவும் சுயதொழில் உதவிக்காவும் கிடைத்த ரூபா 40,000 தொகை குறித்த செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாது 2014 நவம்பர் 27 கணக்காய்வு திகதி வரையிலும் பிபில பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(எ) வெலிமட வலயக் கல்வி அலுவலகத்திற்காக 2014 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மூலதன ஏற்பாடுகளிலிருந்து வலயத்தில் நடாத்தப்பட வேண்டிய ரூபா 2,211,158 பெறுமதியான 40 நிகழ்ச்சித்திட்டங்கள் கணக்காய்வு திகதியான 2014 திசெம்பர் 12 வரையிலும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ப/பசறை கமேவெல ஜயந்தி வித்தியாலயத்தில் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான க.பொ.த.(சா.த) பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் பரீட்சைக்கு தோற்றிய

மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 14 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடைப்பட்ட பெறுமதியைக் கொண்டிருந்ததுடன், 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான க.பொ.த.(சா.த) பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் கணித பாடத்தில் சித்தியடைதல் எண்ணிக்கை 0 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரையாக இருந்ததுடன், அக்காலப்பகுதியில் பரீட்சைக்கு தோற்றிய ஒரு மாணவரேனும் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருக்கவில்லை. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வலயக் கல்வி அலுவலகத்தினதும் கோட்டக் கல்வி அலுவலகத்தினதும் பாடப் பணிப்பாளர்களினால் பாடசாலை மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஊவா மாகாண இயந்திர பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. 28-2866 ஆம் இலக்க லொறி 2013 ஒக்தோபர் 09 ஆந் திகதியின் பின்னர் 2014 நவம்பர் 07 கணக்காய்வு திகதி வரையிலும் பயணத்தில் ஈடுபடுத்தாமல் பாதுகாப்பற்ற விதத்தில் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) பிபில வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய 78 பாடசாலைகளின் தர உள்ளீட்டிற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 15,392,995 தொகை கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 31 வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.4 நிதி முகாமைத்துவ செயற்திறனின்மை**

(அ) பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்தினால் 2015 சனவரி 23 ஆந் திகதி வரையிலும் ரூபா 5,463,400 தொகை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாண சபை கட்டிடத் தொகுதிக்கு 2014 ஆம் ஆண்டிற்காக சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக பிரதிப் பிரதம செயலாளரால் (ஆளணி மற்றும் பயிற்சி) ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் முதலாம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட முழுத்தொகையை மிகைத்து ரூபா 368,774 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

**6.5 மாகாண வீதி அபிவிருத்தியும் மேம்படுத்தலும்**

**ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்**

(அ) குட்டியகொல்ல பாடசாலை வீதி அபிவிருத்தி

ரூபா 1,831,571 தொகை செலுத்தப்பட்டிருந்த இவ் வீதிக்கு புதிதாக கற்களை விசிறி தார் ஊற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அநேகமான இடங்களில் 100 மில்லிமீற்றர் கற்களின் மேல் தார் ஊற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 37.5 மில்லி மீற்றர் மற்றும் 12 மில்லிமீற்றர் கற்களை பரப்புவதற்காக செய்யப்பட்ட செலவினம் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. வீதியின் ஆரம்பத்திலிருந்து 36 மீற்றர் செல்லும் போது வீதியில் வெடிப்பேற்பட்டு 07 சதுர மீற்றர் அளவில் கீழிறங்கியிருந்ததுடன், 51 மீற்றர் செல்கையிலும் அவ்விடத்தில் வீதி கீழிறங்கியிருந்தது.

(ஆ) பதுளை, குட்டியகொல்ல, கஹட்டருப்ப, இலிபதுதென்ன வீதி

ரூபா 3,604,775 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த இவ்வீதியின் ஆரம்பத்திலிருந்து 749 மீற்றர் கடந்து செல்கையில் வீதியின் மூன்று இடங்கள் கீழிறங்கி முழுமையாக சிதைவடைந்திருந்தது.

(இ) மஹியங்கன மயான வீதி

இந்நிர்மாண வேலைக்காக ஒரு நிறுவனத்துடன் 2014 ஏப்ரல் 08 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(I) 100 mm மற்றும் 37.5 mm கல் துண்டுகளுக்கிடையே கற்தூல் காணப்பட்டமை காரணமாக ஒவ்வொரு கட்டத்திற்கிடையே தொடர்பொன்று இல்லாமையால் வீதியின் உறுதித்தன்மை மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(II) வீதியின் அநேகமான இடங்களிலுள்ள பகுதிகள் வெடித்து கீழிறங்கியிருந்தன.

(III) வீதியின் ஆரம்பத்திலிருந்து 37m இற்கும் 64m இற்கும் இடைப்பட்ட 27m நீளமான வீதியின் பகுதி முழுமையாக கீழிறங்கி குழிகள் உருவாகி சரளைக் கற்கள் இடப்பட்ட மேற்பரப்பு வெளியாகியிருந்தது.

(ஈ) பஹத ரத்இந்த உள்ஹிட்டிய வீதி – கற்களைப் விசிறி தார் ஊற்றுதல்

மேற்குறித்த வீதி நிர்மாண செயற்திட்டத்திற்காக ரூபா 694,360 தொகை செலவில் வீதி ஊடாக மதகொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிர்மாணம் தொடர்பாக பின்வரும் நிலைமை அவதானிக்கப்பட்டது.

(I) வீதி ஊடாக இடப்பட்டிருந்த மதகிலிருந்து வழிந்து செல்லும் நீர் அதற்கு கீழுள்ள நுழைவு வீதியுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தமையால் அதிலிருந்து செல்லும் நீரினால் அவ்வீதி அதிகளவில் பழுதடைந்திருந்தது.

(II) இம்மதகினை நிர்மாணித்தமையால் அதிலிருந்து வழிந்தோடும் நீரினால் அண்மையிலுள்ள நுழைவு வீதிக்கும் நீர்ப்பாசன நீரைப் பெற்றுக்கொள்ளும் ட கால்வாயின் வரப்புகளுக்கும் சேதம் ஏற்பட்டமையால் கிராமவாசிகளால் மணல் மூடைகளைப் பயன்படுத்தி மதகு ஊடாக நீர் வழிந்தோடாதவாறு தடுக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இந்நிர்மாணங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 694,360 ஆன தொகை பயனற்ற செலவினமொன்றாக இருந்தது.

## 6.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 6.6.1 களஞ்சிய முகாமைத்துவத்தின் பலவீனங்கள்

(அ) பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற 05 நிறுவனங்களின் களஞ்சியங்களை பௌதீக தெரிவு அடிப்படையில் பரிசோதிக்கையில் ரூபா 244,936 பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் 30 மருந்து இருப்பு விடயங்களில் பற்றாக்குறையொன்றும் ரூபா 1,146,337 ஆன 23 விடயங்களில் மிகையொன்றும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெலிமட ஆதார வைத்தியசாலைக்கு மருந்துகளை களங்சியப்படுத்துவதற்கு போதியளவு இடவசதிகள் இல்லாமையால் மருந்தகத்திற்கு அண்மையில் பாதுகாப்பற்ற விதத்தில் பரசிட்டமோல் மருந்து இருப்பொன்றும், ரூபா 31,980 பெறுமதியான சொபரமைசின் மருந்து இருப்பொன்று கரையான் அரிப்பிற்குள்ளாகியும், ரூபா 197,903 பெறுமதியான 3650 நோமல் சேலைன்கள் பழைய பிரேத கூடத்திலும், வெளி நோயாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள நோயாளர் மலசலகூடம் பயன்பாட்டிற்கு எடுக்காமல் அதில் ஒக்சிஜன் இருப்பொன்றும் முறையற்ற விததத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(இ) வெவேகம மாவட்ட வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் ரூபா 130,396 பெறுமதியான காலாவதியானதும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மருந்துகளும் ரூபா 8,204 பெறுமதியான திரிபோஷா இருப்பும் காணப்பட்டன.

## 6.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்காக கணித உபகரணங்கள் கொள்வனவின் போது கூறு விலைகள் சமர்ப்பிக்காத உபகரணங்களுக்காக ரூபா 227,950 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆயுர்வேதத் திணைக்களத்தினால் நிதி விதி 137(2) மற்றும் 157(7) இ பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2013 ஒக்தோபர் 01 முதல் 2014 ஆகஸ்ட் 31 வரை பாதுகாப்பு சேவைகள் வழங்கியமைக்கான வருகையை உறுதிப்படுத்தும் பதிவேட்டை பரீட்சிக்காது 272 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 194,409 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆயுர்வேதத் திணைக்களத்தினால் சுத்திகரிப்பு சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்காக நாளாந்த வருகை பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. 2013 யூன் முதல் 2014 ஆகஸ்ட் வரை நிர்ணயித்த ஊழியர்களை ஈடுபடுத்தாமையின் காரணமாக ரூபா 377,766 தொகையும் மேலதிக நேரத்திற்காக ரூபா 232,281 தொகையும் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், தண்டப்பணமாக நபரொருவருக்கு ரூபா 100 வீதம் அறவிடப்பட வேண்டிய ரூபா 80,600 தொகையான தண்டப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெலிமட ஆதார வைத்தியசாலைக்குரிய 52-4729 ஆம் இலக்க கெப் வண்டியின் மைலோ மீற்றர் செயற்படாமல் இருந்ததுடன், அதனை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதுளை பிரதி சுகாதார சேவைகள் அலுவலகத்தின் சுத்திகரிப்பு பொருள் களஞ்சியம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய பொருள் வழங்கலில் ரூபா 51,874 தொகை பெறுமதியான பொருள் வழங்கப்படாதிருந்த போதிலும், பட்டியல் கொடுப்பனவின் போது முழுத்தொகையும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) ஊவா மாகாண சபை வாகன பராமரிப்பு பிரிவின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் 250-7849 ஆம் இலக்க கெப் வண்டியின் திருத்தங்கள் தொடர்பாக 10 விடயங்கள் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைக் கருத்திற் கொள்ளாமல் திருத்தங்களை மேற்கொண்ட நிறுவனத்திற்கு ரூபா 393,900 ஆன முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) அரசாங்க இல்லமொன்றுக்காக மாகாண சபையின் நிதியத்திலிருந்து வீட்டுத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், ரத்வத்தே மாவத்தையில் அமைந்துள்ள அரச இல்லமொன்றுக்கு ரூபா 27,080 தொகை செலவு செய்து வெந்நீர் குடுவையொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(எ) மாகாண இயந்திர பணிப்பாளர் அலுவலகத்தின் கொள்வனவுச் சபை Note Book கணனி கொள்வனவை அங்கீகரித்திருந்த போதிலும், ரூபா 448,000 தொகை செலவு செய்து 04 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு செல்லிடத் தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசிகளுக்காக கூறு விலைகளை கோருகையில் இச் செல்லிடத் தொலைபேசிகளுக்காக உள்நாட்டில் கொண்டு வந்து விநியோகிக்கும் நிறுவனமொன்றிடமிருந்து விலை கோரல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த செல்லிடத் தொலைபேசிகள்

நிர்ணயித்த தரத்தில் (Genuine Product) உற்பத்தி செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை. அத்தோடு இதற்காக உற்பத்தியாளரின் உத்தரவாதச் சான்றிதழுக்குப் பதிலாக விநியோக நிறுவகத்தின் உத்தரவாதச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஏ) 2011 திசெம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 சனவரி மாதம் முதல் இலங்கை பொறியியலாளர் சேவைக்குரிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா 15,000 தொகையான படியான்று செலுத்தப்பட வேண்டிய போதிலும் இலங்கை பொறியியலாளர் சேவைக்குரித்தல்லாத உத்தியோகத்தரான மாகாண இயந்திரப் பணிப்பாளருக்கு 2012 சனவரி முதல் 2014 ஒக்தோபர் வரை ரூபா 508,548 தொகை படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன், 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் படிகள் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் தொடர்பாக தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர் கோப்பு ஆணைக்குழுவின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளாமல் இப்படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) 2014 மே 04 ஆந் திகதி முதல் 06 மாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஓய்வு பெற்ற மாகாண இயந்திரப் பணிப்பாளருக்கு 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சம்பளம் மற்றும் படிகள் தீர்மானிக்கப்பட்டு 2014 ஒக்தோபர் வரையிலும் ரூபா 263,474 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) 2011 யூலை 26 ஆந் திகதிய 2011/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கை பிரகாரம் கல்விக்காக பணம் செலவழிக்கப்பட வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆலோசனைகளுக்கு முரணாக பிபில பிரதேச செயலகத்தினால் ரூபா 495,700 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலையொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது.

**6.9 வெளிப்படையான முறைகேடுகள்**

(அ) தியதலாவ ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனம் அதற்கு மேலதிகமாக தியதலாவ ஆதார வைத்தியசாலைக்கும் பாதுகாப்பு சேவைகளை வழங்கியிருந்ததுடன், ஒரு நாளில் ஒரு உத்தியோகத்தர் இரண்டு இடங்களில் சேவை புரிந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 48,066 தொகை 02 நிறுவனங்களிடமிருந்தும் மோசடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊழியர்களால் 2013 மார்ச் 01 முதல் 2013 திசெம்பர் 22 ஆந் திகதி வரை ரூபா 124,347 பெறுமதியான மேலதிக நேர படிகள் கூடுதலாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) ஊவாபரணகம பிரதேச செயலகத்தினால் தனிமையான கிராம அபிவிருத்தி விசேட செயற்திட்டத்தின் கீழ் 2014 யூலை 05 ஆந் திகதி ரூபா 161,000 பெறுமதியான 184 சிமேந்து பக்கற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2014 யூன் 29 ஆந் திகதி அப்பொருட்கள் கிடைத்ததாக இருப்பு புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் இருப்பு சான்றிதழொன்றுடன் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் அவை பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) ப/பசறை கமேவெல ஜயந்தி வித்தியாலயத்தின் அதிபர் 2013 மே 02 ஆந் திகதி பசறை மத்திய மஹா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த போதும், காசோலைப் புத்தகம் பதிலாளுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதிபர் இடமாற்றம் பெற்றுச் சென்று 34

நாட்களின் பின்னர் 2013 யூன் 04 ஆந் திகதி மோசடியாக அவரின் கையொப்பத்துடன், பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிற்குரிய ரூபா 22,000 பெறுமதியான காசோலையொன்று வங்கிக்குச் சமர்ப்பித்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 6.10 நிதியங்களின் குறைப்பயன்பாடு

ஊவா மாகாணத்தின் இளைஞர் விவகார, விளையாட்டு, சமூக நலனோம்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்வலு மற்றும் சக்திவளம், புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு விளையாட்டு அபிவிருத்தி மற்றும் உபகரணங்களின் கொள்வனவிற்காக ஊவா மாகாணத்தின் 26 பிரதேச செயலகங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 30,000 வீதமான ரூபா 780,000 தொகை 2015 ஏப்ரல் 20 கணக்காய்வு திகதி வரையிலும் குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சேதனப் பசளை பயன்பாட்டை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 70,805 பெறுமதியான கொம்போஸ்ட் துண்டாக்கும் இயந்திரமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையிலும் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுஜாதா செவன சிறுவர் இல்லத்தின் நீர் வழங்கல் முறைமை மற்றும் கிணற்றை புனரமைப்பதற்காக ரூபா 1,269,326 தொகையும் மின்சார வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 42,375 தொகையுமாக ரூபா 1,311,701 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், நீர் வழங்கல் முறைமை பயன்படுத்தப்படாததன் காரணமாக அது பயனற்ற செலவினமொன்றாக இருந்தது. இச்செயற்திட்டத்தை மேற்கொள்ளும் நோக்கம் அதிகரித்துச் செல்லும் நீர்ப் பட்டியலை குறைப்பதாக இருந்த போதிலும், நீர் வழங்கல் முறைமை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை காரணமாக 2014 சனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் நீர்ப் பட்டியலாக ரூபா 490,256 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய கூட்டுறவு சங்கங்களை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 489,204 ஆன செலவினமொன்று 2013 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும், 2014 செப்தம்பர் 01 கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் 03 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 50,000 தொகை மற்றும் ரூபா 99,625 பெறுமதியான உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 3 ரூட் 18.5 பேர்ச் அளவிலான குடா முத்தேடுவ என்ற பெயரிலான காணியை கையேற்பதற்காக பதுளை பிரதேச செயலகத்திற்கு ரூபா 2,283,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் இக்காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஆணைக்குழுவின் ரூபா 2,283,000 பணத்தொகை 05 ஆண்டுகளாக விளைவற்று பதுளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தமையால் வேறு பயனுள்ள செயற்பாடொன்றிற்காக பயன்டுத்துவதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

### 6.12 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பிபில வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய வேன் வண்டியொன்று 2013 ஆம் ஆண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் விபத்திற்குள்ளாகியிருந்தது. அதற்கான திருத்தச் செலவினம் ரூபா 350,345 ஆக இருந்ததுடன், மீள்நிரப்பப்படாத காப்புறுதி இழப்பீடு ரூபா 35,332 ஆக இருந்தது.

**6.13 நோக்கத்திற்கு புறம்பான செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாணத்தினுள் தனிமையான கிராமங்களில் வசிக்கும் மக்களின் சமூக நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் தனிமையான கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கு புறம்பாக இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நோக்கத்திற்குரித்தல்லாத அலுவலகத் தேவைப்பாட்டிற்காக அமைச்சு ரூபா 13,402,752 தொகையினை செலவிட்டிருந்தது.

(ஆ) மாகாண சபைக் கட்டிடத் தொகுதியின் II ஆம் கட்ட நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 2,000,000 தொகை நோக்கத்திற்கு புறம்பான செயற்பாடொன்றான பிரதம செயலாளர் அலுவலகத்தை அமைப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(இ) இராணுவத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்கும் நிதி வழங்குவதற்காக ரணவிரு கொடி விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதில் கிடைத்த பணத்தில் 2011 நவம்பர் மாதத்தில் ரூபா 1,000,000 தொகை நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது, 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த அட்டுறு வட்டியுடன் அவ்வைப்பு ரூபா 1,340,751 ஆக இருந்ததுடன், இராணுவத்தின் நலன்களுக்காக கிடைத்த பணம் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6.14 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிர்மாண வேலைகளுக்கு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது வேலை காப்பாளர் சம்பளத்திற்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சம்பளமாக ரூபா 211,500 தொகை மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டு தவறாக மதிப்பீடு தயாரிக்கப்பட்ட 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) தெமோதர மருத்துவ அதிகாரி உத்தியோகபூர்வ விடுதி திருத்த வேலைகளின் முதலாவது கட்டத்தின் போது 13 ஆம் இலக்க உருப்படியின் கீழ் 20 மில்லிமீற்றர் தடிப்பில் 225 மில்லிமீற்றர் அகலமான பீலிப்பலகைகளை வழங்கி பொருத்துவதற்காக 47.39 மீற்றருக்கு ரூபா 24,406 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், இரண்டாம் கட்டத்தில் 08 ஆம் இலக்க உருப்படியின் கீழ் இவ்வேலைக்காக மீண்டும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) தெமோதர பிரதேச வைத்தியசாலையின் கம்பி வேலி நிர்மாணத்தின் 02 ஆம் இலக்க உருப்படியின் கீழ் 130 பழைய கம்பித் தூண்களை கழற்றி அகற்றுவதற்காக ரூபா 45,500 தொகையும் 03 ஆம் இலக்க உருப்படியின் கீழ் பழைய முற்கம்பிகளை அகற்றுவதற்காக 4,006 மீற்றருக்காக ரூபா 60,090 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது, எனினும் அகற்றப்பட்ட கம்பித் தூண்கள் எதுவும் வைத்தியசாலைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன், அகற்றப்பட்ட முற்கம்பிகளில் சிறிய பகுதியொன்று மாத்திரம் வைத்தியசாலை வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ)2011 ஆம் ஆண்டின் தேசிய கட்டிட மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தின் அறிக்கையின் பிரகாரம் வெவேகம பிரதேசம் மண்சரிவிற்கு உட்பட்டுள்ள பிரதேசம் எனவும் நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு பொருத்தமற்ற பிரதேசம் எனவும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கையில் 2012 யூன் 18 ஆந் திகதி வெவேகம மாவட்ட வைத்தியசாலைக்கு ரூபா 973,281 தொகை செலவு செய்யப்பட்டு புதிய வெளிநோயாளர் பிரிவொன்று நிர்மாணிக்கப்பட்டு 2013 பெப்ரவரி 18 ஆந் திகதி அது திறந்து வைக்கப்பட்டது. அதன் ஒரு பகுதியின் நிர்மாணம்

பூர்த்தி செய்யப்படாதிருந்தமையும் சுவர் வெடித்திருந்தமையும் கட்டிடத்தின் சுற்றுப்புறங்களில் நீர் கசிந்து கொண்டிருப்பதும் பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**6.15 பதவியணியினர் நிர்வாகம்**

**6.15.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) மாகாண சபை, அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் - (பாடசாலை பதவியணி நீங்கலாக)**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1141 | 733 | 408 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 348 | 246 | 102 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 6487 | 4786 | 1701 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 4558 | 4550 | 08 | - |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 45 | 257 | - | 212 |

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 1011 | 857 | 154 |
| (ii) | ஆசிரியர்கள் | 16334 | 16120 | 514 |
| (iii) | உதவிப் பதவியணியினர் | 1944 | 1422 | 522 |

(இ) மேற்படி உதவி பதவியணிக்குரிய பாடசாலை செயற்பாட்டு உதவியாளர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து 420 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) 2007 மே 11 ஆந் திகதிய 2007/09 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய CSA/6/6/10/5 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை ஆகியவற்றின் ஏற்பாடுகள் மற்றும் ஆலோசனைகளின் பிரகாரம் அமைச்சரவையின் முன் அங்கீகாரமின்றி ஊவா மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஓய்வுபெற்ற 06 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மொனராகல மாவட்ட விலை குழு தீர்மானித்த நாளாந்த படியை அடிப்படையாகக் கொண்டு 2009 திசெம்பர் 01 முதல் 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி வரை அவர்களுக்கு ரூபா 4,074,900 தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

(உ) ஊவா நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் சுஜாதா செவன சிறுவர் விடுதியின் உதவி மேட்ரன் பதவிக்காக 2010 மே 04 ஆந் திகதி ஊவா மாகாண ஆளுநரால் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் ஏற்பாடுகளின் பிரகாரம் உதவி மேட்ரன் பதவிக்காக மாகாண அரசாங்க சேவைகள்

ஆணைக்குழு மூலம் பகிரங்கமாக விளம்பரப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் கோரி எழுத்துமூல பரீட்சைக்கு உட்படுத்தி புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும், 2012 செப்தம்பர் 01 ஆந் திகதி அப்பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு அவரின் சேவைக்காலம் 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன், 2013 செப்தெம்பர் 27 ஆந் திகதி அவர் உதவி மேட்ரன் (III) ஆந் தரத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஊ) ஊவா மாகாண ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக் கோவையின் 09 ஆந் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக, ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் 17 இல்லத் தலைவி பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக 2014 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 3,038,886 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) 2013 – 2015 ஊவா மாகாண சபை பதவியணி அறிக்கையின் பிரகாரம் பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்தில் 15 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகையொன்று காணப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் அந்த உத்தியோகத்தர்களுக்காக ரூபா 4,228,788 தொகை சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மாகாண இயந்திரப் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய நக்கல சேவை நிலையத்திற்கு 2014 யூன் 16 ஆந் திகதி முதல் 2014 நவம்பர் 05 ஆந் திகதி வரை எதுவித கடமை கையளிப்புமில்லாது இரண்டு இயந்திர செயற்பாட்டு உதவியாளர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன், 2014 நவம்பர் 05 ஆந் திகதி வரையிலும் அந்நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இவ்விரண்டு இயந்திர செயற்பாட்டு உதவியாளர்களுக்கும் அக்காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ரூபா 184,149 தொகையான சம்பளம் மற்றும் படிகள் பயனற்ற செலவினமொன்றாக இருந்தது.

### 6.15.2 கல்விசார்பான பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஏப்ரல் 06 கணக்காய்வு திகதியில் வெல்லவாய வலயக் கல்வி அலுவலக பதவியணியின் வெவ்வேறு பதவிகளில் 38 மிகைகளும் 13 வெற்றிடங்களும் காணப்பட்டன.

(ஆ) வெலிமட வலயக் கல்வி அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உட்படாத ‘‘திட்டமிடல் உத்தியோகத்தர்’’ பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு இலங்கை ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தரொருவர் அதற்காக நியமிக்கப்பட்டு 1992 ஒக்தோபர் 15 ஆந் திகதி முதல் ஆசிரியர் சேவையின் சம்பளம் செலுத்தப்பட்டு ஊவா பரணகம கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தார்.

(இ) வெலிமட கல்வி வலயத்திற்குரிய 49 பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர் சேவையின் I ஆம் தரத்திலிருந்து 3 – II ஆம் தரங்களிலுள்ள ஆசிரியர்கள் பதில் கடமை புரியும் அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்கள் பதில்கடமை புரியும் உத்தியாகத்தர்களாக செயற்பட்ட போதும் வெலிமட கல்வி வலயத்தின் 11 பாடசாலைகளில் அதிபர் சேவையின் 16 உத்தியோகத்தர்கள் பிரதி அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் செயற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(உ) ஊவா மாகாண சபை அரச சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவையினதும் அதிபர் சேவையினதும் 151 உத்தியோகத்தர்கள் 2015 மே மாதம் வரை தேசிய பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன், ஊவா மாகாண சபை பாடசாலைகளுக்குரிய அதிபர்

சேவையின் பதவிகள் வெற்றிடங்களாக காணப்படுகையில்இலங்கை அதிபர் சேவையின் 2-II ஆம் தரத்தில் ஒருவர் தேசிய பாடசாலையொன்றில் பிரதி அதிபராக இணைக்கப்பட்டிருந்தார்.

(ஊ) மொ/தெனகல்லந்த மஹா வித்தியாலயத்தில் 2014 நவம்பர் மாதமளவில் நடனம் மற்றும் இசை ஆகிய பாடங்களுக்காக மூன்று ஆசிரியர்கள் மிகையாக காணப்பட்டனர்.

(எ) 2003 நவம்பர் 07 ஆந் திகதிய இலக்கம் 2003/38 கொண்ட பாடசாலையொன்றின் ஆசிரியர் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் நோக்கில் ஆசிரியர் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மொ/ மெதிரிய ராஜநந்த மஹா வித்தியாலயத்தின் இரண்டு பிரதி அதிபர்கள் எதுவித பாடவேளைகளிலும் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கவில்லை. கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் இதற்கு மேலதிகமாக 03 ஆசிரியர் களுக்கு 2014 நவம்பர் 13 ஆந் திகதி வரையிலும் கற்பிப்பதற்காக எதுவித பாடவேளைகளும் வழங்கப்படாதிருந்ததுடன், அக்காலப்பகுதியில் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 676,788 ஆன சம்பளம் மற்றும் படிகள் விளைவற்ற செலவினமொன்றாக இருந்தது.

(ஏ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.4 ஆம் உப பிரிவின் பிரகாரம் பதவியொன்றில் பதில் கடமை புரிவதற்கு சகல வகைகளிலும் பூரண தகைமை கொண்டிராத ஒருவரை நியமிக்க முடியாத போதிலும், அதற்கு முரணாக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இலங்கை ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்களும் இவர்களில் காணப்பட்டமையால் அவர்கள் பாடசாலை பதவியணியினரில் வைக்கப்பட்டு ஆசிரியர் சம்பளம் செலுத்தப்பட்டு முழுநேர நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஐ) முறையான ஒழுக்காற்று பரிசோதனையில் குற்றவாளியாக்கப்பட்டு 02 சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவருக்கு ஒழுக்காற்றுப் பரிசோதனை நடாத்தப்பட்ட காலப்பகுதியும் உள்ளடங்கும் விதத்தில் சம்பளமற்ற விடுமுறையுடன் இரண்டாம் தர அடிப்படையில் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் செயற்திட்ட முகாமையாளர் பதவியொன்றுக்காக விடுவிக்கப்பட்டிருந்தார்.

(ஒ) உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்பொன்றை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அசேஆ/தேபானி/2001/4/1/S/268 ஆம் இலக்க 2004 நவம்பர் 23 ஆந் திகதிய கடிதத்தினால் சேவை மூப்பு அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சம்பள உரித்து மாத்திரம் உரித்தாகும் வண்ணம் நியமனம் வழங்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவருக்கு அந்த ஏற்பாடுகளை மீறி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டு பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன.

- 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.1.3 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்வதன் அடிப்படையில் 2013 மார்ச் 26 ஆந் திகதி முதல் EKSP செயற்திட்டத்தின் ஊவா மாகாண செயற்திட்ட முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டமை.
- இரண்டாம் தர கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (SEMP) மாகாண செயற்திட்ட முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டமை.
- மேலதிக சம்பளக் கொடுப்பனவு அடிப்படையில் பிபில வலயக் கல்வி பணிப்பாளர் பதவியில் கடமை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டமை

(ஓ) இலங்கை ஆசிரியர் சேவையின் 3(1) ஆம் தரத்தின் உத்தியோகத்தரொருவருக்கு ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்படாத மாகாண நூலக ஒருங்கிணைப்பாளர் பதவியும் 2008 யூலை 23 மற்றும் 24 ஆகிய இரண்டு தினங்களில் இரண்டு உதவிக் கல்விப் பணிப்பாளர் (பதில் கடமை) பதவிகளும் வழங்கப்பட்டிருந்ததுடன், திட்டமிடல் பிரிவின் பாட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஔ) இலங்கை ஆசிரியர் சேவையின் 2-1 ஆம் தரத்தின் உத்தியோகத்தரொருவருக்கு ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத ''ஆங்கில மொழி - விஞ்ஞான பாட மாகாண ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்'' பதவியொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், அப்பதவிக்குரிய உத்தியோகத்தர் 02 சந்தர்ப்பங்களில் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டு வெளிநாடு சென்றிருந்தார்.

(க) 2011 நவம்பர் 16 ஆம் திகதிய 24/2011 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளல் 06 மாதங்களுக்கு மேற்படாத காலஎல்லைக்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தினால் 04 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை 06 மாதங்களுக்கும் மேற்பட்ட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,561,730 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(க) பிரதிக் கல்வி பணிப்பாளர் பதவியொன்றில் கடமை மேவுகை செய்து 2009 செப்தெம்பர் 13 ஆந் திகதி ஓய்வுபெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தரொருவர் 2007 மே 11 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2010 மே 14 ஆந் திகதி மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(கா) ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் 2014 சனவரி 01 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள பிரதி கல்விப் பணிப்பாளர் எண்ணிக்கை 04 ஆக இருந்த போதிலும், 09 பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(கி) ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் தகவல்களின் பிரகாரம் உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதிக் கல்வி பணிப்பாளர் பதவி வகைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 85 ஆக இருந்தது. எனினும் நிரந்தர பதவியணியினர் 88 ஆக இருந்ததுடன், அப்பதவி வகுதியின் கீழ் கடமை மேவுகை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கை 50 பேராக இருந்தமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 53 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(கீ) மாகாண கல்வித் திணைக்களத்திற்கும் 08 வலயக் கல்வி அலுவலகங்களுக்குமாக வெவ்வேறு பதவிகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 473 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(கு) மாகாண கல்வித் திணைக்களத்திலும் 08 வலயக் கல்வி அலுவலகங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட வெவ்வேறு பதவிகளில் நிலவும் 829 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) மாகாண கல்வித் திணைக்களத்தின் புள்ளிவிபர பிரிவின் தரவுகளின் பிரகாரம் 2014 சனவரி 01 இல் உள்ளவாறு ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 1011 அதிபர் பதவிகளில் 323 இலங்கை ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்களின் பதில் கடமை நியமனங்கள் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டிருந்தன. இந்த 323 பேரில் 297 பேர் 1 ஆண்டு முதல் 10 ஆண்டுகளிற்கு மேலாக பதில் கடமை பதவிகளில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கெ) அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 158 ஆசிரியர்களும் பதில் கடமை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட இரண்டு ஆசிரியர்களும் ஆட்சேர்க்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(கே) பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் அதிபர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரிய பிரதிக் கல்வி பணிப்பாளர் மற்றும் உதவிக் கல்வி பணிப்பாளர் பதவிகள் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்

பதவிகளில் கடமை மேவுகை செய்வதற்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 39 உத்தியோகத்தர்களும் இலங்கை அதிபர் சேவையின் 11 உத்தியோத்தர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் இலங்கை ஆசிரியர் சேவையின் 2- II உத்தியோகத்தரொருவர் 09 ஆண்டுகளாக பிரதிக் கல்வி பணிப்பாளர் பதவியில் பதில் கடமை புரிந்து வந்திருந்ததுடன், 47 பேர் 5 ஆண்டுகள் முதல் 21 ஆண்டுகளுக்கும் மேலாக பதில் கடமை புரிந்து வந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6.15.3 சுகாதாரத்துறை சேவைகளில் பதவியணியினர் நிர்வாகம்**

தியதலாவை ஆதார வைத்தியசாலையின் சமையற்காரர் பதவியொன்றும் உணவு தயாரிக்கும் செயற்பாடு தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றும் இல்லாமல் இருந்ததுடன், உணவு மேற்பார்வையாளர் பதவியொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6.17 வாகனப் பயன்பாடு**

(அ) ஊவா மாகாண கமத்தொழில், நீர்ப்பாசன, நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில், காணி, சுற்றுலா மற்றும் போக்குவரத்து அலுவல்கள் அமைச்சிற்குரிய 253-7792 ஆம் இலக்க கெப் வண்டியின் ஒட்டப் பதிவேடுகள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது அலுவலக கடமைகள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கடமையெனக் காண்பித்து 512 கிலோ மீற்றருக்காக ரூபா 7,891 பெறுமதியான எரிபொருள் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டிருந்த போதிலும், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரொருவரால் அந்த ஓட்டப் குறிப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 31-5741 ஆம் இலக்க ஜீப் வண்டி 2014 நவம்பர் 10 ஆந் திகதி பதுளை பிரதி விவசாய பணிப்பாளரால் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 490,328 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 702 இன் பிரகாரம் அது தொடர்பாக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊவா மாகாண கால்நடை உற்பத்தி திணைக்களத்திற்குரிய HH-7258 ஆம் இலக்க ஜீப் வண்டியின் வேகமானி 2014 மார்ச் 28 ஆந் திகதி முதல் 2015 சனவரி 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் செயற்படாதிருந்ததுடன், அக்காலப்பகுதியில் 8877 கிலோ மீற்றர் பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 153,884 பெறுமதியான 1268 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தமை ஓட்டக்குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) 2013 யூன் 05 ஆந் திகதிய PCMD/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் மற்றும் 2014 யூலை 14 ஆந் திகதிய PS/FS/A.Vehi/2009 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படாத 08 உழவு இயந்திரங்கள், 03 மோட்டார் சைக்கில்கள் மற்றும் ஏனைய இரண்டு வாகனங்களை ஊவா மாகாண கமத்தொழில், நீர்ப்பாசன, நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில், காணி, சுற்றுலா மற்றும் போக்குவரத்து அலுவல்கள் அமைச்சினால் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.18 வங்கிக் கணக்கிணக்கங்கள்**

(அ) வைப்புச் செய்யப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்டிருந்த தீர்வையாகாத ரூபா 2,631,392 பெறுமதியான 146 காசோலைகள் தொடர்பாக வங்கியிடமிருந்து விசாரித்து பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழங்கப்பட்டு 06 மாத காலம் கடந்திருந்த ரூபா 262,769 பெறுமதியான 42 காசோலைகள் தொடர்பாக ஊவா மாகாண சபை நிதி விதி 396.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கிக் கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 03 அலுவலகங்களுக்குரிய இனங்காணப்படாத வரவு வைத்தல்கள் ரூபா 105,200 ஆக இருந்ததுடன், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 03 அலுவலகங்களுக்குரிய இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் ரூபா 388,472 ஆக இருந்தது.

**6.19 உள்ளூராட்சி நிறுவனங்களின் கண்காணிப்பு**

மாகாண சபையின் கண்காணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் கீழ் வருகின்ற ஊவா மாகாணத்தில் உள்ள 28 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**6.19.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள 28 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் 20 உள்ளூராட்சி அதிகாரசபைகளால் குறித்த தினத்தில் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

**6.19.2 நிலுவை வருமானம்**

(i) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் ஊவா மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குக் கிடைக்க வேண்டிய வீதவரி மற்றும் ஏனைய வருமானம் என்பன ரூபா 237,538,830 ஆகக் காணப்பட்டன.

(ii) 1979 இன் 42 ஆம் இலக்க மாநகர சபை மற்றும் நகர சபைகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினதும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு கிடைக்க வேண்டிய ரூபா 86,224,832 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களும் ரூபா 65,084,624 தொகையான முத்திரைக் கட்டணங்களும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

**6.19.3 வழங்கப்பட்டிருந்த மிகை அறவீட்டுச் சான்றிதழ்களுக்காக அறவிடுவதற்குள்ள தொகைகள்**

ஆண்டின் இறுதியில் ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் விதிக்கப்பட்டிருந்த மிகை அறவீடுகளுக்காக ரூபா 7,097,643 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக மாகாண சபைக்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காக பின்வரும் நிறுவனங்களில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம்.

(ஆ) ஊவா மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

(இ) பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகம்

(ஈ) பிரதி பிரதம செயலாளர் ( நிர்வாகம்) அலுவலகம்

(உ) ஊவா மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகள்

(ஊ) பிரதேச செயலகங்கள்

(எ) வீதி அபிவிருத்தி திணைக்களம்

(ஏ) 06 ஆயுர்வேத வைத்தியசாலைகள், 19 மத்திய மருந்தகங்கள் மற்றும் 01 மூலிகைத் தோட்டம்

(ஐ) ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம்

### 7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மாகாண சபையின் நிதி முன்னெச்செரிக்கைத் தன்மையினையும் நிதி முகாமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்காக மாகாண சபையின் திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் என்பவற்றில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு முறையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 7.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக ஊவா மாகாண சபையினால் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.5 ஆண்டறிக்கையை சபையில் முன்வைத்தல்

முன்னைய ஆண்டிற்கான ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை மாகாண சபையில் சமர்ப்பித்தல் நிலைமை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | சபையில் முன்வைத்த திகதி |
|---|---|---|
| 2008 | 2010.08.31 | 2011.01.20 |
| 2009 | 2011.08.27 | 2011.10.13 |
| 2010 | 2012.09.12 | 2012.12.13 |
| 2011 | 2014.02.11 | 2014.06.19 |
| 2012 | 2014.10.14 | 2015.04.23 |

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) மாகாண சபை அபிவிருத்தி திட்டம்
(ஈ) உள்ளகக் கட்டுப்பாடு
(உ) உள்ளூராட்சி அதிகாரசபை கண்காணிப்பு
(ஊ) பதவியணியினர் முகாமைத்துவம்
(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஏ) ஒப்பந்த முகாமைத்துவம்